பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**06 05 2026 WEDNESDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் புதிய அரசு அமைக்க தவெக தலைவர் திரு விஜய் உரிமை கோரியுள்ளார்.

2. தவெக-விற்கு ஆதரவு அளித்துள்ள காங்கிரஸ், இந்த கூட்டணி எதிர்கால தேர்தலிலும் தொடரும் என்று அறிவித்துள்ளது.

3. காங்கிரஸ் தங்கள் முதுகில் குத்திவிட்டதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது.

4. பிளஸ் டூ தேர்வு முடிவுகளை இறுதி செய்யும் பணிகள் நடைபெற்று வருவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

5. 17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் புதிய அரசு அமைக்க தவெக தலைவர் திரு விஜய் உரிமை கோரியுள்ளார்.

இன்று சென்னையில் ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கரை சந்தித்து, இதற்கான கடிதத்தை அவர் வழங்கினார்.

முன்னதாக, தவெக-வுக்கு ஆதரவு அளிக்கப்படும் என்று காங்கிரஸ் அறிவித்தது.

இதுதொடர்பாக, அக்கட்சியின் தமிழக பொறுப்பாளர் திரு கிரீஷ் சோடங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் புதிய அரசு அமைக்க தவெக-வுக்கு ஆதரவு அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மாநிலத்தில் காமராஜர் ஆட்சியை மீண்டும் கொண்டுவர இரு கட்சிகளும் இணைந்து பாடுபடும் என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கூட்டணி உள்ளாட்சித் தேர்தல் மற்றும் மக்களவைத் தேர்தலில் தொடரும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக மக்களின் தீர்ப்பிற்கு மதிப்பளிக்கும் வகையில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி மற்றும் தவெக தலைவர் திரு விஜய் இணைந்து தமிழக

மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய உறுதியேற்றுள்ளதாகவும் திரு கிரீஷ் சோடங்கர் அதில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் காங்கிரஸ் சட்டப்பேரவைக்குழு தலைவராக திரு ராஜேஷ் குமார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து, தவெக அலுவலகத்திற்கு சென்ற காங்கிரஸ் கட்சியின் சட்டபேரவை உறுப்பினர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் திரு விஜய்யை சந்தித்து ஆதரவு கடிதத்தை சமர்ப்பித்தனர்.

தவெக அமைச்சரவையில் பங்கேற்க உள்ளதாகவும் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக 108 இடங்களில் வெற்றிபெற்ற தவெக-விற்கு தற்போது ஐந்து காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்ததையடுத்து, கூட்டணிக்கான எண்ணிக்கை 113-ஆக அதிகரித்துள்ளது.

திரு விஜய் இரண்டு தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளதால், அறுதிப்பெரும்பான்மைக்கு இன்னும் ஆறு உறுப்பினர்கள்

தேவைப்படும் நிலையில், இதர கட்சிகளுடனும் தவெக ஆலோசனை நடத்தி வருகிறது.

இதற்கிடையே, காங்கிரஸ் தங்கள் முதுகில் குத்திவிட்டதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு சரவணன் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், தங்கள் உழைப்பால் வெற்றி பெற்ற காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் இந்த முடிவை எடுத்துள்ளது தமிழக மக்களுக்கு செய்யும் துரோகம் என்றும் கூறினார்.

அவசர கதியில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி இதற்கான முடிவினை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம், காங்கிரஸ் நம்பகத் தன்மையை இழந்துவிட்டதாகவும் திரு சரவணன் கூறினார்.

இந்நிலையில், தமிழக மக்களின் நலனை கருத்தில்கொண்டே தவெக-வுடன், கூட்டணி வைத்துள்ளதாக காங்கிரஸ் கட்சியின் செல்வி ஜோதிமணி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், தற்போதைய சூழலை கருத்தில்கொண்டு காங்கிரஸ் இந்த முடிவினை மேற்கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இதனை குறைகூறி திமுக ஆதரவாளர்கள் கருத்து தெரிவிப்பது ஏற்புடையது அல்ல என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸின் தலைமை பண்பு குறித்து யாரிடமும் சான்றிதழ் பெற வேண்டிய அவசியம் தங்களுக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் நலன்சார்ந்த பயணத்தை காங்கிரஸ் தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும் செல்வி ஜோதிமணி கூறியுள்ளார்.

தவெக-விற்கு ஆதரவு அளிப்பது குறித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி உரிய ஆலோசனைகளை மேற்கொண்டு முடிவினை அறிவிக்கும் என்று அதன் தலைவர் திரு தொல் திருமாவளவன் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆதரவு கோரி தவெக தங்களுக்கு கடிதம் அனுப்பியிருப்பதாக கூறினார்.

இடதுசாரி கட்சிகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

நாளை கட்சியின் முன்னணி நிர்வாகிகளுடன் ஆலோசித்து முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் திரு தொல். திருமாவளவன் கூறினார்.

இந்திய யூனியன் முஸ்லீம் லீக், திமுக கூட்டணியில் தொடரும் என்று அறிவித்துள்ளது.

இதற்கிடையே, அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் அக்கட்சியின் மூத்த நிர்வாகிகள், அதன் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமியை இன்று சென்னையில் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

தேர்தலுக்கு பிந்தைய அஇஅதிமு-வின் நிலைப்பாடு குறித்து இந்த ஆலோசனையின் போது விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் சமையல் எரிவாயு விநியோகம் சீராக நடைபெற்று வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை இணைச்செயலர் திருமதி சுஜாதா சர்மா,

பெட்ரோல் நிலையங்களும் முழுமையாக செயல்பட்டு வருவதாக கூறினார்.

குழாய் மூலம் சமையல் எரிவாயு இணைப்பு வழங்குவதற்கான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் திருமதி சுஜாதா சர்மா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலின்போது வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதில் **ECINET** செயலி முக்கிய பங்கு வகித்ததாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த செயலியை இதுவரை **10** கோடி பேர் பதிவிறக்கம் செய்துள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வாக்குப்பதிவு தினத்தன்று அதிக எண்ணிக்கையில் இந்த செயலி பயன்படுத்தப்பட்டதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் பிளஸ் டூ பொதுத்தேர்வு முடிவுகளை இறுதி செய்யும் பணிகள் நடைபெற்று வருவதாக அரசு தேர்வுகள் துறை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தேர்வுகள் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேர்வு முடிவுகள் வெளியாகும் நாள் குறித்த விவரம் ஒருநாளைக்கு முன்னதாக அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தமிழகத்தில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளநிலை பட்டப்படிப்பு முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை அதற்கான இணையதளத்தில் நாளை முதல் பதிவு செய்யலாம் என்று மாநில அரசு கூறியுள்ளது.

இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணவர்கள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உள்ள மாணவர் சேர்க்கை உதவி மையங்கள் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மாநிலத்தில் உள்ள **181** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் **159** பாடப்பிரிவுகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*<<<<<<<>>>>>>*

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த சில தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte —வி ஆர் துரை - 57 Sec. )***

இதற்கிடையே, திருவாரூர் மாவட்டத்தில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், இன்று பரவலாக மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — விஜயகுமார் - 22 Sec. )***

*<<<<<<<>>>>>>*

*மாவட்டச் செய்திகள்*

தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு மதன் பெயரில் போலி முகநூல் பக்கம் உருவாக்கப்பட்டு, பணமோசடி

நடைபெற்று வருவதாகவும், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் காவல்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

----------------

தென்காசியில் உள்ள அருள்மிகு காசிவிஸ்வநாதர் ஆலயத்தில் ஆயிரத்து எட்டு சங்காபிஷேகம் இன்று நடைபெற்றது.

----------------

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டுடில் உள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் வைகாசி திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

<<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**17** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

சவுதி அரேபியாவின் **Jeddah-**வில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி **9.30-**க்கு தொடங்குகிறது.

---------------

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Nongpoknganba Meitei Oina, Parsanth,**

**Mohammed Yasser,** ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

உஸ்பெகிஸ்தானின் தாஸ்கண்டில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் **15** வயதுக்கு உட்பட்டோருக்கான முதல் சுற்று ஆட்டங்களில் அவர்கள் வெற்றிபெற்றனர்.

**17** வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் **Paul Nivesh** மற்றும் **Ranver-**ரும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

-----------

ஸ்வீடனில் நடைபெற்றுவரும் **Tepe Sigeman** செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி கூடுதல் புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

-----------

ஆசிய கோப்பைக்கான நடன விளையாட்டுப் போட்டிகள் இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

----------

ஆசிய பசிபிக் கோல்ஃப் சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<<END>>>>>>>**